1979 மார்ச் 31]

ஒரு சமயம் இரும்புக்கல் சத்து அதிலே கலந்தால் மக்களுக்கு நல்லது என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. தொடர்ந்து அந்த தூசி வருகிறது. அயர்ன் பர்த் ஆரம்பத்திலிருந்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வெறும் தண்ணீரை மட்டும் சில சமயங்களில் தெளித்து வருகிறார்கள். ஆந்திராவில் இருக்கும் வைசாக்கிலும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வாறு கேள்வி நேரத்தில் நீண்ட விளக்கமாகப் பேசுவதை அனுமதிக்க முடியாது. சுருக்கமாகக் கேளுங்கள். பெரிய விளக்கங்கள் தேவையில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: கண்ட்லா போர்ட்டிலும் வைசாக் போர்ட்டிலும் பாதுகாப்பு முறையில் கல் ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரியவருகிறது. அதே போன்று பாதுகாப்பான முறையில் கல் ஏற்றுமதி செய்ய இங்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கததை வலியுறுத்த மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அமெரிக்க தேசிய சுற்றுப்புற காற்று அழுத்த மிகுதியாக இதிலே தூசி கலந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காற்றில் அனுமதிக்கத்தக்க தூசி 3/220 மைக்ரோ கிராம் ஆகும். எனவே, தண்ணீர் தெளிப்பதோடு விளக்கெண்ணையும் கலந்து தெளிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அதற்குப் பின்னால் இவைகள் பாதுகாப்பான முறையில் ஏற்றப்பட வேண்டுமென்பதற்காக நல்ல திட்டம் ஒன்றைத் தீட்டி அதன் வழியாக செயல்பட மத்திய அரசு ஒப்புதல் வந்தவுடன் 92 லட்சம் ரூபாய் செலவில் ஆவன செய்ய இருப்பதாக துறைமுகத் தலைவர் தெரிவித்திருக்கிறார். உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

*வினா எண் 578— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் கைத்தறி தொழில் கூட்டுறவுகள் ஏற்படுத்த மாபெரும் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) மற்றும் (ஆ) தமிழக அரசு தயாரித்துள்ள ஆறாவது ஐந்தாண்டுத் திட்டப் படி, திட்டக்காலம் முடியும் முன்கூடுதலாக 1·25 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரப்படுவார்கள். இவர் களில் தறியில்லாத சுமார் 40,000 பேர்களுக்கு தொழிற்சாலை முறையில் 200 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும். மிகுதியுள்ள 85,000 நெசவாளர் கள், ஏற்கனவே செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களிலும் புதிய கூட்டுறவுச் சங்கங்களிலும் அங்கத்தினர்களாக சேர்க்கப் பட்டு வருகின்றனர். பங்குத்தொகையாக நெசவளார் களுக்கும், சங்கங்களுக்கும் அரசு அளிக்கும் தொகை ரூபாய் 1,605 லட்சம் என மதிப்பிடப்படுகிறது.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: கைத்தறி வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருப்பது வரவேற்கத்தக்கது. கைத்தறிக்கு முக்கியமானது நிலையான, நியாயமான விலையில் நூல் கிடைக்கவேண்டும். இப்போது கிடைப்பதில்லை. ஐந் தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக நிலையான, நியாயமான விலையில் நூல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: கைத்தறித் துறையில் நூல்விலையைக் கட்டுப்படுத்த வேண்டியது மத்திய அரசாங்கத்தின் கடமை. நூல் விலையில் ஒரு மாநிலத் திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கும் அனைத்து மாநிலங்களிலும் ஒரே நிலையான நூல் விலையை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. இப்போது நூலின் விலை சற்று உயர்ந்திருக்கிறது என்பதை தமிழக அரசு மத்திய அரசுக்கு சுட்டிக்காட்டி நூல் விலையைக் குறைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: சொந்தமாகக் கைத்தறி இல்லாத வர்களுக்கு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந் தெந்த இடங்களில் எத்தனை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. சொந்தமாக தறி இல்லாதவர்கள் எட்டையபுரத்தில் ஆயிரக்கணக்கான பேர் இருக்கிறார்கள். அங்கு தொழிற் கூட்டுறவு நெசவு சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்யப்படுமா?

1979 மார்ச் 31]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: 1977-78 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 49 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு தறிஇல்லாத நெசவாளர் களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தத் திட்ட கால முடிவுக்குள் இந்த 49 சங்கங்கள் உள்ளிட்டு 200 சங்கங்களை தறி இல்லாத நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதியில் அமைக்க அரசு முயற்சித்து வருகிறது.

கைத்தறித்துணி விற்பனைக்குச் சலுகை.

*வினா எண் 579— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கைத்தறித் துணிகளுக்கும் தனிப்பட்ட கைத்தறி வியாபாரிகளுக்கும் "ரிபேட்" சலுகைகளை அளித்திட அரசு ஆலோசித்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன்: தனியார் வியாபாரிகளுக்கு ரிபேட் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லுகிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் கைத்தறி துணியை வாங்கி ஏற்றுமதி செய்கிறார்கள். அவ்வாறு ஏற்றுமதி செய்யக்கூடியவர் களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறதா? ஒரு ஆண்டிலே எந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, கைத்தறித் துறையிலே தள்ளுபடி என்பது கூட்டு றவுத் துறையிலே உற்பத்தி செய்யப்படுகிற ரகங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. தனியார் துறையிலே உற்பத்தி செய்யப் படுகிற கைத்தறி துணிகளுக்கு அரசு எந்தவிதமான தள்ளுபடியும் கொடுப்பதில்லை. ஏற்றுமதி செய்கிறவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்பியிருக் கிறார்கள். 1972 ஆம் ஆண்டிலே ஊக்க போனஸ் கொடுப்ப